**நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் - 2022**

---

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 0486-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சக்தி மற்றும் வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வரையறுத் லங்கா மின்சார (தனியார்) கம்பனி செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மேல் மாகாணத்தில் புதுப்பிக்கக்கூடிய சிறிய மின்வலு நிலைய முறைமைகளை நிர்மாணிப்பதன் ஊடாக கலந்த புதுப்பிக்கக்கூடிய மின் நிலைய முறைமைகளை தாபிப்பதற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் புதுப்பிக்கக்கூடிய சிறிய உப நிலைய முறைமைகளை தாபித்தல் பெயரின் கீழ் இக்கூறு அமுலாக்கப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2022 திசெம்பர்31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பழரமாணங்களுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை /கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனிக்கும் மொறட்டுவ பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) | | | |
| | (i)பிரிவு 1 | முன்னோடி மற்றும் ஆராய்ச்சி செயற் திட்டத்திற்கான இணைய தளம் உள்ளதுடன் வெளியிடக் கூடியதான முன்னேற்றங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது டன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தது. சிறிய உப நியைய ஆய்வுகளின் இறுதி முன்னேற்பாடுகளுடன் இணையதளத்தில் வெளியிடப்படும். | MOUஇன்ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii)பிரிவு 3.1 | செயற்திட்டமானது 2022 திசெம்பர் 31 அளவில் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் சுமாட் உப நிலைய அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது UOM கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்தது. தற்போது LECO ஆல் தொழில்நுட்ப மீளாய்வு செயற்பாட்டில் உள்ளதுடன் கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுவதுடன் இது விரைவில் வெளியிடப்படும். இருந்தும் | MOUஇன்ஏற்பாடுகளின் பிரகாரம் சுமாட் உப நிலைய அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியம் தாபிக்க்பட வேண்டுமென ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. | |
| (iii)பிரிவு 3.8 | MOU இற்கமை நெறிப்படுத்தல் குழுக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவக்கைகளிற்கான செயற்பாட்டு ஒப்பந்த உட்படிக்கை இன்மையால் நெறிப்படுத்தல் குழுவின் நடவடிக்கைகள் செயற்திட்ட அமுலாக்கல் மற்றும் மானிய கைதவிர்ப்பு தொடர்பில் தீர்மானம் செய்கையில் அவர்களுடைய ஆரம்ப எதிர்வு கூறலுடன் மிகவும் வரை யறுக்கப்பட்டது. பின்னர், குழு சுட்டிக் காட்டிய காலப் பகுதியின் போது மேற்குறித்த குறித்த வேண்டுகை வெளிப் படுத்துவதற்காக மெதுவாக மாற்றப்பட்டது. | MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் நெறிப்படுத்தல் குழு செயற்பட வேண்டும். |
| (iv) பிரிவு3.10 | குழுவானது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அடுத்துவரும் ஆண்டிற்காக முறையான ஆராய்ச்சி பரிந்துரைகளை செய்ய வேண்டியதுடன் ஆராய்ச்சி திட்டம் மற்றும் பாதீடு தயாரிக்கப்படும். செயற்திட்டமானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் அத்தகைய தகவல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியம் ஆராய்ச்சி பாதீட்டு மூலம் தாபிக்கப்பட்டுள்ளது. குழுவானது ஆராய்ச்சி பரிந்துரைகளிற்காக கோரப்பட்ட விளம்பரம் திறந்ததாக இருக்கும். | செயற்திட்டங்களின் நோக்கங்களை அடைவதற்கு MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) பிரிவு 4.3 | LECO இரண்டு தரப்பினரும் (LECO மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம்)சூரிய சக்தி மின்சார உருவாக்கலின் எந்தவொரு | MOU இன் பிரகாரம்,LECO இந்த மானியத்தின்சூரிய சக்தி குழுவிடமிருந்து நலனெதுவும் பெறப் | MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நேரடியான அல்லது மறைமுகான நிதி நன்மைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டன. இதன்படி கணக்காய்விற்கு பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சூரிய சக்தி குழுவிடமிருந்து 225MWh உருவாக்கப்பட்டிருந்ததுடன் தேசிய உப மின் நிலையத்திற்கு (சூரிய சக்தி கொள்வனவு உடன்படிக்கை இல்லாமல்) 33MWh வழங்கியிருந்தது என அவதானிக்கபபட்டது. அதேநேரம், 2022 மே மாதம் முதல் 2022 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக சுற்றுப் பகுதியின் நடவடிக்கைகளிற்காக மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றன. எனவே,சுமாட் உபநிலைய அபிவிருத்தி நிதியம் தாபிக்காமையால் மொறட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் லங்கா மின்சார கம்பனி என்பவற்றால் சூரிய மின்சக்கு குழுவிடமிருந்து நலன்கள் பெறப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பட்டிருக்காததுடன் UOMஇருக்கவில்லை. தற்போது சகல சூரிய சக்தி குழுவும் மின்சாரத்தை உருவாக்குவதுடன் அவர்களுடைய மின்சார பயன்பாட்டை குறைத்தலை UOM வலையமைப்பிற்கு பங்களிப்பு செய்கின்றதுடன் மிகையான மின்சாரம் பற்றறி சேமிப்பகத்தில் சேமிக்கப்பட்டன. அதேநேரம் உருவாக்கப்பட்ட மிகையான மின்சாரம் தேசிய நிலையத்திற்கு வழங்கப்பட்டதுடன் அந்த நிபுணர்கள் மானிய வசதிக்கு உட்படுத்த வேண்டும். மீட்டரிடல் ஒழுங்குகள் தாபிக்கப்பட்டதுடன் நிதியத்திற்கு சமமான பணப் பெறுமதியை மாற்றியிருந்தது. | |
| (vi) பிரிவு 7 | MOU கைச்சாத்திட்ட பின்னர் குறைந்தது 3 மாதங்கள் இல்லாது தரப்பினருக்கு இடையில் MOU கைச்சாத்திட வேண்டுமென இணைந்து செயற்படுகின்ற சட்ட ஒப்பந்தம் வெளிப்படுத்துகின்றன. 2018 ஒக்தோபரில் MOU கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் செயற்திட்டம் 2022 | தற்போது UOM கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்தது. தற்போது LECO ஆல் தொழில்நுட்ப மீளாய்வு செயற்பாட்டில் உள்ளதுடன் கைச்சாத்திட எதிர் பார்க்கப்படுவதுடன் இது விரைவில் வெளியிடப்படும். | MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் இணைந்து செயற்படுகின்ற சட்ட ஒப்பந்தம் மீளாய்வாண்டு இறுதிவரையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| புதுப்பிக்கக்கூடிய சிறிய உப மின்வலு முன்னோடி செயற்திட்டத்தின் வடிவமைப்பு, நிர்மாணம், பொருத்துதல் மற்றும் பரீட்சிப்பிற்காக தெரிவுசெய்யப்பட்ட கேள்வியார் சிறிய உப மின்நிலைய முறைமையின் இரண்டு ஆண்டு செயற்பாடுகளிற்காக அத்தியாவசியமான உப பாகங்களை கோரியிருக்கவில்லை. எவ்வாறாயினும், தொழில் நுட்ப மதிப்பாய்வுக்குழு ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் மேற்குறித்த கேள்வி விடயத்திற்கு உடன்படக்கூடிய தீர்விற்கு உட்படுத்தி கேள்வியை சிபார்சு செய்திருந்தது. பின்னர், ஏனைய அத்தியாவசியமான உப பாகங்களை கோரியதற்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் உத்தரவாதங்களை ஒப்பந்தகாரர் வழங்கியிருந்தமையால் 2020 பெப்ரவரி 11 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | இந்த விடயம் ஒப்பந்தம் வழங்குவதற்கு மன்னர் ஒப்பந்தகாரருடன் நடைபெற்ற கூட்டங்களில் ஒன்றில் விவாதிக்கப்பட்டது. மேற்குறித்த உபகரணத்திற்காகஇரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் உத்தரவாதங்களை அவர்கள் வழங்கியிருந்தும் இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளிற்றாக உப பாகங்கின்ன கிரயமும் தள்ளுபடியுடன் உள்ளடக்கட்டது என கருதபபட்டது. | இந்த விடயம் நிறிய உப நிலைய முறைமையின் இரண்டு ஆண்டுகள் செயற்பாடுகளிற்காக அத்தியாவசியமான உப பாகங்களை வழங்குவதற்கு கேள்வியாளர் கடமைப்பட்டமையால் வழங்குநரால் உடன்பட்ட காலப்பகுதிக்காக உத்தரவாதங்களையும் சேர்த்து கவனத்திற்கொள்ள வேண்டும். |

### 3.2 கள வருகைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2023 மே 03 இலான கள வருகைகளில், அனுமதிக்கப்பட் முரண் கட்டளை II இன் கீழ் 2022 செப்தெம்பர் 30 ஐ.அ.டொலர் 183,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட றியல் ரைம் டிஜிட்டல் சிமுலேற்றர் (RTDS) பொருத்தப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்பட்டது. | உபகரணம் சிக்கலினை உருவாக்கியிருந்தது, உற்பத்தியாளர் அவருடைய மேற்பார்வையின் கீழ் உபகரணத்தின் வெளியேற்றி பரீட்சிப்பதற்கு சிபார்சு செய்திருந்தது. 2023 மே 03 இல் கள வருகை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் தறடபோது செயற்பாட்டில் உள்ள உபகரணத்தின் வெளிறேற்றல் மற்றும் பரீட்சிப்பிற்கு 2023 மே 08 இல் கனடாவிலிருந்து அதிகாரமுடைய பிரதிநிதியொருவரை அனுப்பியிருந்தார். | இயந்திரத்தை பொருத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |